மேல் படிப்புக்கு உதவி செய்யுமாறு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுக்குக் கடிதம் எழுதியுள்ளார். துண்டுக் காகிதத்திற்கு மதிப்பளித்து, அவரது வேண்டுகோளை ஏற்ற மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள், அவரது பள்ளிப் படிப்பு முதல் பொறியியல் படிப்பு வரை கல்வி உதவித் தொகை வழங்கி, அவரது வாழ்வில் ஒளியேற்றியதால், தற்போது திரு. சரவணன் அவர்கள் இந்திய வருவாய்த் துறைப் பணிக்குத் தேர்வாகி, உத்திரகாண்ட் மாநிலத்திலே பயிற்சி மேற்கொண்டு வருகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) என்கிற செய்தி என்னை நெகிழச் செய்தது. துண்டுக் காகிதத்தில் கோரிக்கை வைத்தால்கூட நிறைவேற்றும் நீதி தேவதை மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) பொது மக்கள், ஏழை, எளியோர் பயன்பெற 17 கோடி ரூபாய் மதிப்பீட்டில் வருவாய்த் துறைக்கு புதிய வட்டங்கள், வருவாய்க் கோட்டங்கள் வருவது குறித்து முதலமைச்சரின் அறிவிப்புகள். மேலும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்களுக்கான புதிய தொழில் கொள்கை, 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கிண்டி தொழிற்பேட்டையில் அடுக்குமாடி தொழில் வளாகம் குறித்த அறிவிப்புகள். மாண்புமிகு அம்மா அவர்களின் இலட்சிய அறிவிப்புகளினால், திட்டங்களினால் வெற்றிகள் குவியட்டும், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை மற்றும் வருவாய்த் துறை குறித்த ஏற்றமிகு அறிவிப்புகளை வெளியிட்ட மாண்புமிகு அம்மா அவர்களுக்குப் பேரவையின் சார்பிலும், என் சார்பிலும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

3. தகவல் கோரல்—தொடர்ச்சி

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்—தொடர்ச்சி

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. சக்கரபாணி என்ன? சொல்லுங்கள்.

திரு. அர. சக்கரபாணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கட்சியின் சார்பாக 24 கவன ஈர்ப்புத் தீர்மானங்களும், ஒத்திவைப்புத் தீர்மானங்களும் கொடுத்துள்ளோம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையெல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கின்றன. உட்காருங்கள். (குறுக்கீடு) அவையெல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கின்றன. கவன ஈர்ப்புத் தீர்மான அறிவிப்புகளுக்குப் பதில் வர, வர ஒவ்வொன்றாக நான் எடுத்துக் கொண்டிருக்கிறேன். (குறுக்கீடு) இல்லை, இப்போதுதான் காலையில்

2015 ஆகஸ்ட் 31] [பேரவைத் தலைவர்]

கொண்டுவந்து கொடுத்தீர்கள். (குறுக்கீடு) இன்று காலையிலே 9–45 மணிக்குத்தான் கொண்டுவந்து கொடுத்தீர்கள். (குறுக்கீடு) அது என்னுடைய ஆய்வில் உள்ளது. (குறுக்கீடு) அதெல்லாம், அறிக்கை வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, (குறுக்கீடு) உட்காருங்கள். அவ்வளவுதான். (குறுக்கீடு) அதெல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கிறது. உட்காருங்கள், எடுத்துக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, பேசுங்கள்.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் இருக்கையைவிட்டு முன்னே வந்தார்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் என்னுடைய ஆய்வில் இருக்கிறது. காலையிலேதான் கொண்டுவந்து கொடுத்தீர்கள். (குறுக்கீடுகள்) இவ்வாறு செய்வதெல்லாம் சரியில்லை. நீங்கள் இருக்கையைவிட்டு வருவது முறையல்ல. (குறுக்கீடு) இடத்தைவிட்டு வருவது சரியல்ல. உங்கள் இடத்திலே போய் உட்காருங்கள். (குறுக்கீடு) முதலில் உங்கள் இடத்திலே போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் போய் உங்கள் இடத்தில் உட்காருங்கள். நீங்கள் கேட்டவுடனே எடுக்க முடியாது. முறையாகத்தான் எடுத்துக்கொள்ள முடியும். தினம் ஒன்று எடுத்துக்கொண்டிருக்கிறேன். நான் எடுப்பேன். (குறுக்கீடு) அறிக்கை வந்தவுடனே நான் எடுப்பேன். (குறுக்கீடு) முதலில் உங்கள் இடத்திற்குப் போங்கள். (குறுக்கீடு) உங்கள் தலைவர் சொல்வதையாவது கேளுங்கள், போங்கள். முதலில், உங்கள் இடத்திலே போய் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஜெ. அன்பழகன், இதற்கு மேலே பேசினீர்கள் என்றால், உங்கள்மீது நடவடிக்கை எடுப்பேன். (குறுக்கீடு) இல்லை (குறுக்கீடு) எச்சரிக்கிறேன். உங்களை நான் எச்சரிக்கிறேன். (குறுக்கீடு) உங்கள் இடத்திற்குப் போங்கள். எச்சரிக்கிறேன், நடவடிக்கை எடுக்க வேண்டி இருக்கும். (குறுக்கீடு). மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

செல்வி கே. பாலபாரதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விழுப்புரம், சேஷசமுத்திரம் கிராமத்திலே தாழ்த்தப்பட்ட மக்களுக்கான. . . (குறுக்கீடு)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நீங்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். அது என்னுடைய ஆய்வில் இருக்கிறது. அறிக்கை வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடு) என்ன? திரு. சு. குணசேகரன் சொல்லுங்கள். (குறுக்கீடு) இல்லை, உட்காருங்கள். அறிக்கை வந்தவுடனே எடுத்துக்கொள்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) அறிக்கை வர, வர ஒவ்வொன்றாக எடுத்துக்கொண்டிருக்கிறேன். (குறுக்கீடுகள்) உட்காருங்கள், எடுக்கிறேன். அறிக்கை வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன், உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. குணசேகரன், சொல்லுங்கள்.

முற்பகல் 11–35

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய கரும்பு விவசாயிகளுக்கு பாக்கி இருக்கக்கூடிய பணத்தினை வழங்குவது சம்பந்தமாக அறிவிப்பு. . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அவையெல்லாம் அறிக்கை வந்தவுடன் எடுக்கப்படும். உட்காருங்கள். நீங்கள் இப்பொழுதுதான் கொடுத்திருக்கிறீர்கள். என் ஆய்வில் உள்ளதை நீங்கள் வற்புறுத்த முடியாது. (குறுக்கீடுகள்) பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்கிறேன். திரு. சு. குணசேகரன் என்னவென்று சொல்லுங்கள்.

திரு. சு. குணசேகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய கரும்பு விவசாயிகளுக்கு வழங்கக்கூடிய நிலுவைத் தொகை பாக்கி இருக்கிறது...

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இன்று காலை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதற்குப் பதில் சொல்லியிருக்கிறார்கள். அப்போது நீங்கள் அவையில் இல்லை. உட்காருங்கள். (குறுக்கீடு) அதற்கு காலையிலேயே பதில் சொல்லிவிட்டார்கள். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) டாக்டர் கிருஷ்ணசாமி, என்ன சொல்லுங்கள்?

டாக்டர் க. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 13 பழங்குடியினர் உட்பட 20 தமிழர்கள் ஆந்திராவில். . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அதெல்லாம் இப்போது இல்லை. (குறுக்கீடுகள்) இதுகுறித்து முன்பே சொல்லிவிட்டேன். இவையெல்லாம் எனது ஆய்வில் உள்ளன; எடுத்துக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) திரு. பாலகிருஷ்ணன், கட்சிக்கு ஓர் உறுப்பினர்தான்

2015 ஆகஸ்ட் 31] [பேரவைத் தலைவர்]

zero hour–ல் பேசலாம். செல்வி பாலபாரதி அவர்களும் பேசுகிறார்கள். நீங்களும் பேசுகிறீர்கள். இதுபோல் எல்லோரும் கேட்டால் எப்படி? எல்லோருக்கும் எப்படி நான் வாய்ப்புத் தர முடியும்? அதெல்லாம் வாய்ப்புத் தர முடியாது, உட்காருங்கள். (குறுக்கீடு) திரு. கணேஷ்குமார் (குறுக்கீடு) எல்லோரும் கொடுத்த தையெல்லாம் அவசரமானதாகத்தான் சொல்வீர்கள். அதற்கான பதில் வந்தால்தான் எடுத்துக்கொள்ளமுடியும். (குறுக்கீடு) திரு. கணேஷ்குமார், சொல்லுங்கள்.

திரு. அ. கணேஷ்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ** அதுமட்டுமல்லாமல் இன்றைக்கு கோவை மாவட்டத்தில். . .*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *திரு. கணேஷ்குமார் ஆதாரம் இல்லாமல் பேசக்கூடாது. (குறுக்கீடு) துரைமுருகன் நீங்கள் ஏன் எழுந்து நிற்கிறீர்கள். ஏற்கெனவே உங்கள் கட்சி உறுப்பினர்களுக்குப் பதில் சொல்லிவிட்டேன். (குறுக்கீடு) நீங்கள் என்ன கேட்கிறீர்கள்? கேளுங்கள். (குறுக்கீடு) திரு. கணேஷ்குமார் ஆதாரம் இல்லாமல் பேசியது அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது. (குறுக்கீடு) என்னவென்று சொல்லுங்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உங்களுக்கு ஒத்தாசை செய்வதற்காகத்தான் நான் எழுந்தேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *சொல்லுங்கள்.*

திரு. துரைமுருகன்: *ஆய்வில் இருக்கின்றது. அதில் ஒன்றும் சந்தேகம் இல்லை. தயவுசெய்து நான் உங்களைக் கேட்பது, நாங்கள் 20, 25 கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் கொடுத்திருக்கிறோம். எல்லாமே ஆய்வில் இருக்கின்றதா? அதில் ஒருசிலவற்றிற்காவது நீங்கள் முக்கியத்துவம் கொடுக்கலாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பதில் வர, வர நான் எடுத்துக்கொள்கிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) இன்றைக்குக்கூட அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை எடுத்திருக்கிறேன். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் கொடுத்திருக்கிறீர்கள். பதில் வர, வர ஒவ்வொன்றாக எடுக்கிறேன். நிச்சயமாக எடுப்பதற்கு முயற்சி செய்துகொண்டிருக்கிறேன். இன்றைக்குக்கூட ஓர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த*

*** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

நிகழ்வினை எடுத்திருக்கிறேன். தினம் ஒன்று எடுக்கவிருக்கிறேன். (குறுக்கீடு) வாய்ப்பு வரும்போது எடுக்கிறேன், இருங்கள். பதில் வரட்டும், நான் எடுக்கிறேன். (குறுக்கீடு) அதெல்லாம் வற்புறுத்த முடியாது. நீங்கள் உட்காருங்கள். நான் பதில் வந்தவுடன் எடுக்கிறேன். நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

6. கவன ஈர்ப்பு

உள்நாட்டு நீர்நிலைகளில் பொது ஏலம்மூலம் மீன்பாசி குத்தகை விடப்படுவதால் ஏற்பட்டுள்ள நிலை

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வுக் குறித்த கவன ஈர்ப்பு. மாண்புமிகு உறுப்பினர்கள் திரு. எம். ஆறுமுகம், திரு. வெ. பொன்னுப்பாண்டி, திரு. அ. சவுந்தரராசன், திரு. க. பாலகிருஷ்ணன், திரு. கே. தங்கவேல், திரு. இரா. அண்ணாதுரை மற்றும் திரு. ஆர். ராமமூர்த்தி ஆகியோரில் ஒருவர் அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மீன் வளத் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

3. தகவல் கோரல்–*தொடர்ச்சி*

உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்–*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உட்காருங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் அவையில் இல்லை. அதற்கெல்லாம் அவையில் பதில் சொல்லியாகிவிட்டது. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர்திரு. துரைமுருகன் புரிந்துகொள்ள வேண்டும். காலையில் 9–45 மணிக்குத்தான் உங்கள் உறுப்பினர் கொண்டுவந்து என்னிடம் கொடுத்தார். நான் பதில் கேட்டு அனுப்பியிருக்கிறேன். பதில் வந்தவுடன் அதனை எடுக்கிறேன். உட்காருங்கள். (குறுக்கீடுகள்)9–45 மணிக்குக் கொண்டுவந்து கொடுத்துவிட்டு இப்போது கேட்டால் எப்படி எடுத்துக்கொள்ள முடியும்? (குறுக்கீடுகள்) இப்படியெல்லாம் கேட்டால் நான் என்ன செய்ய முடியும்? (குறுக்கீடுகள்) 9–45 மணிக்குக் கொண்டுவந்து கொடுத்துவிட்டு 10–00 மணிக்கு அவையில் எழுப்பினால் நான் என்ன செய்ய முடியும்? எப்படி எடுத்துக்கொள்ள முடியும்? நீங்களும் அமைச்சராக, இருந்திருக்கிறீர்கள். (குறுக்கீடுகள்) அப்படி இருக்கும்போது உங்களது கட்சி உறுப்பினரை நீங்கள் கட்டுப்படுத்துங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். வாய்ப்பு*